பதிவு அஞ்சல் மூலமாக

AA/77262/2020 AA/20003/2012

<u>ந.க.எண். 028317/சி.எ.ஆர்–1/2017</u>

காவல்துறை
தலைமை இயக்குநர் அலுவலகம்,
சென்னை – 600 004
<u>நாள். 29. 10.2020.</u>

06 NOV 2020
கண்காணிப்பாளர் அலுவலகம் திருவள்ளூர் மாவட்டம்

## <u>குறிப்பாணை</u>

பொருள்– காவல் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.பா.அசோக்குமார், இளநிலை உதவியாளர், திருவள்ளூர் மாவட்டம் (த/பெ மறைந்த அலுவலக உதவியாளர், திரு.கோ.பாண்டுரங்கன்) – என்பவரது தற்காலிக பணியினை வரன்முறைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள அரசாணையினை அனுப்புதல் – தொடர்பாக.

05 NOV 2020
கண்காணிப்பாளர் அலுவலகம் திருவள்ளூர் மாவட்டம்

பார்வை– 1. காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களிடமிருந்துப் பெறப்பட்ட கடித ந.க.எண். அ4/20013/2012, நாள். 12.12.2018.
2. அரசாணை (2டி) எண். 255, உள் (காவல்–15) துறை, நாள். 19.10.2020.

++++++

திருவள்ளூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிப்புரியும் திரு.பா.அசோக்குமார் (த/பெ திரு.கோ.பாண்டுரங்கன், மறைந்த அலுவலக உதவியாளர்) என்பவரது தற்காலிக பணியினை 03.09.2012 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி பார்வை இரண்டில் காணும் அரசாணை (2டி) எண். 255, உள் (காவல்–15) துறை, நாள். 19.10.2020 ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்அரசாணையினை தக்க நடவடிக்கை மேற்கொள்வதற்காக இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

2) மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு தனியரது தற்காலிகப் பணியினை 03.09.2012 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தியதற்கு, பதில் ஆணை பிறப்பித்து அதன் விவரத்தை (Counter order) தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும். மேலும், அரசாணையினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை உடன் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A.So

இணைப்பு– அரசாணை (2டி) எண். 255,
உள் (காவல்–15) துறை,
நாள். 19.10.2020.

31/10/2020

காவல்துறை தலைமை இயக்குநருக்காக

31/10/2020

பெறுநர்
காவல் கண்காணிப்பாளர்,
திருவள்ளூர் மாவட்டம்.

நகல் – கண்காணிப்பாளர், கருணை அடிப்படை நியமனப் பிரிவு, தலைமை அலுவலகம்.
நகல்– கண்காணிப்பாளர், என்.ஜி.பி–6 பிரிவு, தலைமை அலுவலகம்.
நகல்– கோப்புக்கு.

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – காவல் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு பா.அசோக்குமார் (த/பெ. மறைந்த திரு கோ. பாண்டுரங்கன், அலுவலக உதவியாளர்) என்பவரின் இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உள் (கா–15) துறை**

அரசாணை(2டி) எண். 255

நாள் 19.10.2020
சார்வரி வருடம்
ஐப்பசி மாதம் – 3
திருவள்ளுவர் ஆண்டு–2051
படிக்கப்பட்டது :–

1. காவல் துறை தலைமை இயக்குநரின் கடித எண்.028317/சி.எ.ஆர்.1/2017, நாள் 01.02.2019 மற்றும் 04.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்டுள்ள கடிதங்களில், காவல் துறை தலைமை இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறையில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கோ. பாண்டுரங்கன் என்பவர் பணியிடையே 03.02.1991–ல் மரணமடைந்துள்ளார். அவரின் வாரிசான அவரது மனைவி திருமதி.கிருஷ்ணவேணி என்பவர் தனது மகன் திரு பா.அசோக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 22.07.1996–ல் விண்ணப்பம் அளித்துள்ளார். அவ்விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்து 5 ஆண்டுகள் 5 மாதங்கள் கடந்த நிலையில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் அப்போது 18 வயதினையும் நிறைவு செய்யவில்லை. தனியர் பிறந்த தேதி 15.06.1981. தனியர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அக்டோபர் 1996–ல் தேர்ச்சிப் பெற்றுள்ளார். மேற்கண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் 18.08.2005 தேதி முதல் கணினி விவர பதிவாளராக திருவள்ளூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு, 03.09.2012 முற்பகல் முதல் அதே அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் அளித்துள்ளார். எனவே, தனியர் திரு பா.அசோக்குமார் என்பவரது பணியினை 03.09.2012 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் விதித் தளர்வு செய்து ஆணைகள் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. காவல்துறை தலைமை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, திரு பா.அசோக்குமார் இளநிலை உதவியாளர், என்பவரின் பணியினை 03.09.2012 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58–ன் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி (அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 12(bbb)) தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6) (b) மற்றும்

பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக (அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 23 (a) (ii)) தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)–ஆகியவற்றைத் தளர்வு செய்தும், தனியர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அ.சா. எண்.15513/ கூ–1/2020, நாள் 09.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண்.25808/ஜி2/2020, நாள் 13.10.2020 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

S.K.பிரபாகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை – 4.
மாநில கணக்காயர், சென்னை– 18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை/
கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்

நகல்:
திரு. பா.அசோக்குமார், இளநிலை உதவியாளர்,
(கு/பெ. மறைந்த திரு கோ. பாண்டுரங்கன்,
அலுவலக உதவியாளர்)
திருவள்ளூர் மாவட்ட காவல் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்
(காவல் துறை தலைமை இயக்குநர்
அலுவலகம் வழியாக)
உள் (காவல்–5) துறை, சென்னை.9.
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை,
சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை,
சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19.10.2020
பிரிவு அலுவலர்

C.No. A4/20013/2012 Dist. Police Office
dated 03.2021 TVLR

Endorsement.

A copy of G.O.(2-D) No.255 Home (Pol-15) Dept. dated 19/x/20 communicated in C.O. Memorandum in Rc.No. 028313/CAR.1/2012 dated 29/x/2020 is communicated to Tr. P. Ashok Kumar, Jr. Asst. District Police Office, TVLR for information and necessary action.

[signature] 11.3.2021
For SP/TVLR
[initials] 11/3/2021

To

Tr. P. Ashok Kumar,
Jr. Asst.
District Police Office,
Thirunelveli.

S/o,
E.R.
[initials] 11/3/21

ஐயா,

நகல் பெற்றுக் கொண்டேன்.

பா. அசோக்குமார்
11/3/21